RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22357

OPEN ACCESS

# தமிழ் நாவல்களில் விளிம்புநிலை மகளிர் பெண்ணிய நோக்கில் ஒரு பார்வை

ச. யோகேஸ்வரி [அ, *]

[அ] தமிழ்த்துறை, செல்லம்மாள் மகளிர் கல்லூரி, கிண்டி, சென்னை-32, இந்தியா

# A feminist perspective on marginalized women in Tamil novels

S. Yogeswari [a, *]

[a] Department of Tamil, Chellammal Women's College, Guindy, Chennai-32, India

* Corresponding Author: yogaphoto099@gmail.com

Received: 18-05-2022
Revised: 02-07-2022
Accepted: 13-07-2022
Published: 30-07-2022

Check for updates

## ABSTRACT

Feminism is one of the many fields that emerged from a sociological point of view and later established itself in the field of literature. The term feminism has been subjected to intense discourse in the literary sphere as can be seen from various works. Its impact is so vast that no one who chooses a field of modern creative research can leave feminism. In India, feminism developed as an element of recognizing and eliminating the oppressive factors of women, such as religion, family, sexuality, and cultural status, which emphasised male centrality. Feminism tries to examine the caste-based social system, cultural politics and social evaluation, not just the single word 'man' as the cause of female subjugation. From such a feminist perspective, this paper explores the position of women in marginalized novels.

**Keywords:** Feminism, Society, Feminist Perspective, Marginalized Women

## முன்னுரை

"பெண்ணியங்களில் பலவகை என்பது தவிர்க்க முடியாதது" என்பார் சந்தால் மொஃபேயின். (மார்க்ஸ் 2001) அவரின் கூற்றிற்கேற்ப சமூக மாற்றங்கள், அரசியல் நடவடிக்கைகள், பண்பாட்டு கலப்புகள் இவற்றிற்கேற்ப பல பெண்ணிய வகைகளின் தேவையும் கூடிக்கொண்டே வருகின்றது. சமூகத்தில் புதுப்புது பரிமாணங்களோடு உருவாகி வந்த பெண்ணியக் கோட்பாடுகள் படைப்பிலக்கியங்களிலும் தனக்கான இடத்தைத் தக்க வைத்துக் கொண்டன. கதையாடல் தளங்களில் பெண்ணியச் சிந்தனைகள் அதிகம் பேசப்பட்டன. பெண் சார்ந்த கருத்தாடல் தளம் விரிவு கண்டது. பெண் எழுத்தாளர்கள், ஆண் எழுத்தாளர்கள் என்ற பேதம் இல்லாமல் இரு தரப்பினரும் பெண் குறித்த சிந்தனைகளைத் தங்கள் நாவல்களில் வெளிப்படுத்தலாயினர். பெண்ணியத்தின் சமூக எதிர்வினையாக பல இந்திய எழுத்தாளர்கள் பெண் சிக்கல்கள் குறித்த கதையாடல்களை அதிகம் எழுதலாயினர். தமிழ்ச்சூழலிலும் பெண்ணியத்தின் கூறுகளோடு இணைந்த எழுத்துக்கள் ஆக்கம் பெறத் துவங்கின. ஆரம்ப காலத்தில் பெண் கல்வி பெண்ணின் சமத்துவம் எனத் துவங்கிய பெண் மைய எழுத்து, மெல்ல விதவை மறுமணம், வரதட்சணைக் கொடுமை, பாலியல் சுரண்டல், பாலியல் வன்முறை என விரிவடையத் தொடங்கியது. தமிழ் நாவல்களில் விளிம்புநிலை மகளிர் பெண்ணிய நோக்கில் ஒரு பார்வை எனும் இவ்வாய்வுக் கட்டுரையானது அதிகாரக் கட்டமைப்பைத் தகர்க்கும் பெண் பாத்திரப்படைப்பு, கலக மொழி பயன்பாடு, மரபுக் கோட்பாட்டைக் கட்டுடைக்கும் பெண் நிலைவாதம், வன்முறையைப் பதிவு செய்தல் மற்றும் பெண்ணைச் சுரண்டுதல் போன்ற உட் தலைப்போடு அமைய இருக்கின்றது.

## அதிகார கட்டமைப்பைத் தகர்க்கும் பெண் பாத்திரப்படைப்பு

அஞ்சலை புதினத்தில் வரும் ‘அஞ்சலை’ கதாபாத்திரமும் உப்பு வயலில் வரும் ‘வடுவச்சி’ மற்றும் ‘மல்லிகா’ பாத்திரங்களும், தீட்டு கதையில் வரும் ‘காமாட்சி’ கதாபாத்திரமும் ஆணாதிக்க உலகின் சட்ட திட்டங்களைக் கேள்விக்கு உட்படுத்தும் பாத்திரங்களாக அமைந்திருப்பதைக் காணலாம். மேலும் பண்பாட்டு விழுமியங்கள் எனும் பெயரில் மழுங்கடிக்கப்பட்ட பெண்ணின் உணர்வுகளை இப் பாத்திரங்கள் விவாதத்திற்கு உட்படுத்துகின்றன. அஞ்சலை புதினத்தில் வரும் ‘அஞ்சலை’ கதாபாத்திரம் தனக்கு பிடிக்காத திருமண வாழ்க்கை அமைந்த போது, தன் விதியென நினைத்து அதனை ஏற்றுக் கொள்ளாமல் தனக்குப் பிடிக்காத வாழ்க்கையை விட்டு வெளிவர கருதுகிறாள். “தாலியை அறுத்து எரிந்து விட்டு நிம்மதியாய் குந்திக் கிடக்கிற மாதிரி மனதில் நினைத்துப் பார்த்தால் செமை கழிந்த மாதிரி தான் இருந்தது.” (கண்மணி குணசேகரன் 1999)

அஞ்சலையின் இத்தகைய நினைப்பு பண்பாட்டு உலகில் பெரும் அதிர்வை ஏற்படுகின்றது என்றே கூறலாம். மேலும் வழியில் பார்க்கும் தன் மூத்தாரிடம், “எனக்கு என்னடா வழி சொல்ற? நீதான் மாப்ளன்னு வந்தன், ஒன்னப் பார்த்து தான் சம்மதிச்சன். நீயும் ஏமாத்திட்ட. ஒப்பன் ஊரு சனம் எல்லாம் ஏமாத்திட்டுது எனக்கு அவங்கூட படுக்க சம்மதமில்ல எனக்கு என்னா வழி சொல்ற? (கண்மணி குணசேகரன் 1999) என்ற அஞ்சலையின் வார்த்தைகள் தமிழ்க் கற்புநிலைக் கோட்பாட்டைக் கட்டுடைத்து தன் அந்தரங்க ஆசையை முன்னிலைப்படுத்தும் பெண்ணிய வடிவம் எனலாம். ஒரு பெண் திருமணத்திற்குப் பின் தன் கணவனைத் தவிர யாரையும் மனதாலும் நினைக்கக்கூடாது என்பன போன்ற ஆணாதிக்கக் கருத்தாக்கம் இங்கே சிதைக்கப்படுகின்றது. பெண்ணின் உண்மையான உடல் சார்ந்த உணர்வுகள் எவ்வித போலி புனைவுகளும் இன்றி வெளிப்படுகின்றன.

## கலகமொழி பயன்பாடு

“பெண் எழுத்தின் முதல் கட்டம் பெண்ணினத்திற்கு இழைக்கப்பட்ட அநீதியையும் கொடுமையையும் பதிவு செய்வது மற்றும் கேள்விக்கு உட்படுத்துவது. இரண்டு, பெண் இருத்தலுக்கான வரையறைகளென ஏற்கனவே கூறப்பட்டவைகளை மறுத்து புதிய மதிப்பீடுகளுடன் தன்னைத் தானாக நிலை நிறுத்துவது, மூன்று மொழிக்குள் தனக்கான புனைவை மறு கட்டமைப்பு செய்து புதிய கலகமொழி மூலம் மொழியின் பழைய எல்லைகளை மீறுவது” என்பார் மாலதி மைத்ரி.(மாலதி மைத்ரி 2008)

பாமாவின் ‘கருக்கு’,’சங்கதி’ புதினங்கள் இத்தகைய கலகமொழிக்கான மிகச்சிறந்த உதாரணங்களாக இருக்கின்றன. பெண்ணைப்பண்பாட்டு அடிப்படையில் அடக்க எண்ணும் சமூக நடவடிக்கை, குடும்பத்திற்குள்ளும் எதிர்கொள்ளும் அடக்குமுறைகள், பெண்ணின் உடல் மொழி மற்றும் அவளது இயங்கு தளம் ஆணாதிக்க சமூகத்தால் கண்காணிக்கப்படுதல் ஆகியவற்றை விமர்சிக்கிறார்.

“ஆம்பள ஆயிரந்தடவ நம்மள அசிங்கப்படுத்தலாம், அவமரியாதையா பேசலாம், நடத்தலாம், அது சாதாரண விஷயம் ஆனா பொம்பள ஒரு தடவை ஒரே தடவை எதார்த்தமா, மானமுள்ள மனுசியா இருந்தரட்டும் அவனுங்களால தாங்கவே முடியாது. அவள அடுச்சி ஒடுக்கி அவென் கைக்குள்ள அடக்கி வைகாட்டி அவன் குடிச்ச கஞ்சி செமிக்காது. பொம்பள கைக்கி மீறிப் போனா அவனுங்க மீசத்துடிக்கும். (பாமா 2001) என ஆணின் அதிகார அமைப்பு பெண்ணை ஒடுக்குகின்ற நிலையை சுட்டுகின்றார்.

“அதுலயும் பொம்பள பிள்ளைகள் சடங்காயிட்டாப் போதும் என்னத் தென்னத்தையோ சொல்லி அவங்க நடமாட்டத்தக் கட்டுப்படுத்துராக, நம்மளும் பயந்து போயி மெரண்டு மெரண்டு முழிச்சுகிட்டு எல்லாத்துக்கும் அச்சப்பட்டு நடுங்கி சாகுறோம்… நெஞ்சுல துணிவு இல்லாட்டி நம்ம

சக்தி பூராவும் இழந்து ஒரு பிரயோஜனமும் இல்லாமப் போவோம், துணிச்சலா இருந்தம்னா எதையும் சாதிக்கலாம்.(பாம்மா, 2001)

எனப் பெண்ணின் இருப்பு சமயச் சடங்குகள் என்ற பெயரில் கட்டுப்படுத்தப்படுவதைச் சுட்டுகிறார். மேலும் இத்தகைய கட்டுப்பாடுகள் பெண்ணின் சுயத்தை அழிப்பதை உதறி மீள்வதின் மூலமாகவே, பெண்ணின் உண்மையான சுதந்திரம் நிலை நிறுத்தப்படும் என்பதையும் கூறுகிறார்.

### மரபுக் கோட்பாட்டைக் கட்டுடைக்கும் பெண்நிலைவாதம்

இந்திய சமூகத்தில் என்றும் 'ஒழுக்கம்' என்ற சமூக விதியைப் பெண் மீது மட்டுமே சுமத்தி பெண்ணைக் கட்டுக்குள் வைத்திருக்கும் அதே வேளையில் ஆண் கட்டற்ற பாலியல் நடவடிக்கைகளில் திளைப்பது நடைமுறையில் காணக்கூடியதே. ஆண் ஒழுக்க வரையறையை மீறும் போது அதனை வெறும் தனிமனிதத் தவறாகப் பார்க்கும் சமூகம் பெண் அவ்வெல்லையைக் கடக்கும் போது அதனைச் சமூக மீறலாகக் கண்டு அவளைத் தூற்ற முற்படுகிறது.

'ஆனந்தாயி' புதினத்தில் வரும் மாணிக்கம் எனும் பாத்திரம் பெண் பித்தனாக அறியப்பட்டாலும் மைனர் என்ற அடைமொழியோடு அவனை ஏற்றுக்கொள்ளும் மக்கள், அறியாப் பருவத்தில் ஆசிரியர்களால் பாலியல் அத்துமீறலுக்கு உள்ளான நீலவேணியை ஒழுக்கம் தவறியவளாகக் கூறி அவள் நடத்தையை விமர்சிக்கும் சமூக அவலத்தைச் சுட்டுகிறார். கற்பு தனிமனித ஒழுக்கம் போன்ற குணங்களை ஒருதலை பட்சமாக பெண்ணுக்கு மட்டுமே வலியுறுத்தும் சமூக அவலத்தை வெளிப்படுத்துகிறார் ஆசிரியர் சிவகாமி.

'தீட்டு' கதையில் வரும் காமாட்சி எனும் பாத்திரத்தின் மூலம் பெண்ணின் கற்பொழுக்கம் சார்ந்த நடவடிக்கைகளை சமூகம் விமர்சிக்கும் நிலையை எடுத்துக் கூறுகிறார் ஆசிரியர் அழகிய பெரியவன். பாலியல் தொழிலில் ஈடுபடும் காமாட்சி தொழிலில் ஈடுபடும் தன்னை வெறுக்கும் சமூகம் தன்னிடம் வரும் ஆண்கள் பற்றி விமர்சிக்காத சமூக நடவடிக்கை குறித்துச் சிந்திக்கிறாள்.

“இவன்களுக்கும் மனைவி குடும்பம் என்று இருக்கும் தானே? ஏன் இங்கு வருகிறார்கள்? வந்தாலும் இவன்கள் ஆண்கள். நாங்கள் போனால் மட்டும் தேவிடியாள்.”( அழகிய பெரியவன் 2000)

“கற்பு, தனிமனித ஒழுக்கம் போன்ற சமூக விதிகளை ஆண் மீறும்போது அது அவன் சுதந்திரத்தின் அடையாளமாகவும், ஆணின் சாகசமாகவும் பெருமைப்படுத்தப்படுவதுண்டு பெண்ணை விட எல்லா விதத்திலும் மேலானவன் உயர்ந்தவன் என்ற மன அமைப்பில் ஒரு துணிச்சலை இச்சமூகம் வழங்குகிறது.” (மாலதி மைத்ரி, 2008) என்ற மாலதி மைத்ரியின் கூற்று எல்லா இந்திய சமூகத்திலும் செயலாக்கம் பெறுவதை காணலாம்.

### பெண்டின் மீதான காவலர் வன்முறை

விளிம்புநிலை பெண்களின் சமூக பாதுகாப்பு என்பது இன்றும் கேள்விக்குரிய ஒன்றாகவே உள்ளது. 'தீட்டு' கதையில் வரும் காமாட்சி விபச்சாரம் செய்ததற்காய் காவலரால் கைது செய்யப்படுகிறாள். ஆனால் காவல் நிலையத்தில் காவலர்களாலேயே பாலியல் வன்முறைக்கு ஆட்படுவதை ஆசிரியர் சுட்டுகிறார்.

“காமாட்சியின் இரண்டு கைகளையும் பின்னால் இழுத்துப் பிடித்துக் கொண்டான் ஒரு போலீஸ்காரன். இன்ஸ்பெக்டர் அவள் வாயில் கஞ்சா நிரம்பிய ஒரு சிகரட்டை வைத்து கொளுத்தினான். மயங்கி விட்டால் காமாட்சி... இடுப்பு பெல்ட்டை தளர்த்தி பேண்டை அவிழ்க்க தொடங்கினான்.”( அழகிய பெரியவன், 2000)

வறுமை நிலையில் வாழும் பெண்களுக்குச் சமூகத்தில் பாதுகாப்பற்ற சூழல் நிலவுவதையே இந்நிகழ்வு சுட்டுகிறது. தனிமனித வக்கிரங்களே இதுபோன்ற நிகழ்வுகளுக்குக் காரணமாய் அமைந்தபோதும், பாலியல் தொழிலில் ஈடுபடும் பெண்களின் மீதான சமூகப்

புறக்கணிப்பு, அவர்களின் பாதுகாப்பற்ற சூழல் ஆகியவை இது போன்ற வன்முறைகளுக்குச் சாதகமாய் அமைந்துவிடுகிறது. பாலியல் வன்முறை என்பது ஆணாதிக்க சுரண்டலின் ஒரு வடிவமாகவே கருதப்படுகிறது.

“ஆண்கள் தங்களின் பாலியல் தேவையை பூர்த்தி செய்து கொள்ள பல வழிகள் இருக்கும்போது, பலாத்காரம், முறையற்ற பாலியல் அணுகுமுறை இவற்றில் ஈடுபட முனைவது என்பது ஆண்மை மேலாக்கத்தை நிலை நிறுத்தும் முயற்சியாகவே தோன்றுகிறது. (ரோஸலின்ட் மைல்ஸ், 2001)என்ற ரோஸலின்ட் மைல்ஸ் கூற்று சிந்திக்கத்தக்கது.

## பணியிடங்களில் எதிர்கொள்ளும் பாலியல் சுரண்டல்கள்

பெண்கள் பெரும்பாலும் அவர்களின் பணியிடங்களிலேயே பாலியல் சுரண்டலுக்கு உள்ளாகின்றனர். பெண்கள் தங்களுக்கு நேரும் பாலியல் வன்முறைகள் மற்றும் சுரண்டல்களை வெளியே சொல்லும் போது ஆணாதிக்க சமூகம் பெண்களின் ஒழுக்கத்தையே கேள்விக்கு உட்படுத்தும் நிலை இங்கு விளக்கப்படுகிறது. மேலும் கிராமப்புறங்களில் உள்ள பரந்துபட்ட இயற்கை சூழல் அம்மக்கள் வாழ்வின் வெளிப்படைத்தன்மை ஆகியவையும் காமுக எண்ணம் கொண்ட ஆண்களுக்கு சாதகமாய் அமைந்துவிடுவது அஞ்சலை புதினத்தின் மூலம் உணர்த்தப்படுகிறது. அஞ்சலை தன் கணவனுடன் சுமூக உறவு இல்லாமல் தனித்து இருப்பதை அறிந்து கொள்ளும் முந்திரி தோட்டத்துக் காவல்காரன் தோட்டத்துக்கு வேலைக்கு வரும் அஞ்சலையிடம் தவறான எண்ணத்துடன் அணுகுகிறான்.

“என்ன அஞ்சல, மண்ணாங்கட்டி கிட்ட நீ சரியா பேசுறது இல்லியாம்... வா மண்ணாங்கட்டி வரதுக்குள்ள அப்படி செத்த நேரம் முந்திரி மறவா போயிட்டு வரலாம்... மனசுக்கு பிடிக்காதவனோட எத்தனை நாளைக்கு தான் சும்மா இருப்ப” (கண்மணி குணசேகரன், 1999) என்றான்.

அஞ்சலையின் அந்தரங்க வாழ்க்கையை அறிந்து கொள்ளும் தோட்டக்காரன் அவளைத் தன் பாலியல் இச்சைக்கு உட்படுத்த முனைவதை ஆசிரியர் சுட்டுகிறார். வருமானத்திற்காக ஆணுக்கு இணையாய் வெளியே வரும் பெண்கள் இது போன்ற பிற ஆண்களின் வக்கிரத்திற்கு ஆளாவதை காண முடிகின்றது. அதைப்போலவே தன் கணவன் மண்ணாங்கட்டியிடமிருந்து பிரிந்து தன் தாய் வீட்டிற்கு வரும் அஞ்சலை வயலுக்கு வேலைக்கச் செல்லும் போதும் மணியாரு, செல்வம் என்ற இரண்டு ஆண்கள் மூலமாக பாலியல் சுரண்டலுக்கு உள்ளாகிறாள்.

“விடாப்பிடியாக அஞ்சலையின் பக்கத்து மெனை அறுப்புக்கு மணியாரும் செல்வமும் ஆளுக்கொரு பக்கமாய் குந்திக்கொள்வார்கள். கை உதறி கால் உதறி அறுக்க இவளுக்குக் கூச்சமாக இருக்கும் அரிவாள் பாய்கிற மாதிரி அவர்கள் பார்வைகள் வேறு, ஒதுங்குகிற மாராப்பையும் முட்டியைத் தாண்டி மழுப்பிக் கொள்கிற புடவையையும் சரி செய்து கொள்வதே பெரிய வேலையாக இருக்கும்.”(கண்மணி குணசேகரன், 1999 )

பெண்களின் உடல் எப்போதும் ஆண்களின் காம குணத்திற்குத் தீனியாய்ப் பார்க்கப்படுவதை இங்கு சுட்டுகிறார் ஆசிரியர். அதிலும் கணவனைப் பிரிந்த பெண்கள் சமூகத்தில் மற்ற ஆண்களின் காமுக அணுகுமுறைக்கும் பாலியல் சுரண்டலுக்கும் அதிகம் ஆளாவது உணர்த்தப்படுகின்றது.

பணியிடங்களில் இத்தகைய பாலியல் சுரண்டல்களைச் சந்திக்கும் பெண்கள் அதனை வெளியில் கூறவும் அஞ்சுகின்றனர். தன் மீதான ஒழுக்கம் கேள்விக்கு உள்ளாக்கப்படுமோ என்ற அச்சநிலையே இதற்குக் காரணமாக உள்ளது.

## முடிவுரை

விளிம்புநிலை நாவல்களை எழுதும் ஆசிரியர்கள் வர்க்க முரண்களை களைவதில் உள்ள இடர்பாடு, சாதியச் சமூகத்தின் வன்முறைக்கு இலக்காகும் தாழ்த்தப்பட்ட சமூகம், சமூக அங்கீகாரத்திற்கான தலித் ஆண்களின் போராட்டம், அம்மக்களின் மிகுதியான வறுமை நிலை ஆகியவற்றை முன்னிலைப்படுத்துவதில் காட்டும் அக்கறையைப் போன்று தலித் குடும்ப அமைப்பில் பெண்களின் இருப்பு, சாதிய சமூகத்தால் தாக்ககுதலுரும் தலித் பெண்களின் நிலை, தன் சமூகத்தை முன்னெடுத்து செல்வதில் பங்கு கொள்ளும் பெண்களின் உழைப்பு தளம் ஆகியவற்றை இன்னும் சற்று ஆழமான வாசிப்புக்கு உட்படுத்தப்பட வேண்டும். தாழ்த்தப்பட்ட பெண்களுக்கான விடுதலையைப் புறக்கணித்துவிட்டு ஒட்டுமொத்த பெண்ணிய விடுதலை என்பது சாத்தியம் ஆகாத ஒன்று. தலித் பெண்ணியச் சிந்தனைகளைப் புறக்கணித்துவிட்டு தலித்தியம் என்ற விடுதலைக் கோட்பாடும் முழுமை பெறாது.

## References

Azhakiya periyavan (2000) Thittu, Thamizhini, Chennai.

Bama (2001) Karukku, Vidiyal, Coimbatore.

Kanmanikunasekaran (1999), Anjalai, united writer’s, Chennai.

Malathi Maithri (2008) Nam thanthayaraik kolvatheppadi, pulam, Chennai.

Marks, A. (2001) kalacharathin vanmurai, Adaiyalam, Trichy.

Rosalint mayils (2001), Ulaka varalatril pangal, New century book house, Chennai.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License